IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

**அசல் வழக்கு எண். 203/2020**

சாட்சி : PW– 2

பெயர் : திரு. குமார் தேதி : 25.06.2024

**குறுக்குவிசாரணை** :– (பிரதிவாதிகள் தரப்பில்)

நீதிமன்றத்திலிருந்து சாட்சியம் அளிப்பதற்கு சம்மன் வந்தது. முதல்விசாரணை பிரமாண பத்திரிக்கையில் கூறியுள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். வாதியும் நானும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள். பக்கத்து வீட்டுக்காரர். வாதிக்கு நான் ஏற்கனவே நிலம் வாங்கி கொடுத்துள்ளேன். வா.சா.ஆ.–1 கிரய உடன்படிக்கையில் கண்ட விவரங்கள் எனக்கு தெரியும். அதை வழக்கறிஞர் தயாரித்துக்கொடுத்தார் என்றால் நாங்கள் கொடுத்ததை அவர் தயார் செய்து கொடுத்தார். வா.சா.ஆ.–1ல் நானும் துளசி என்கிற சதீஷ் என்பவரும் சாட்சி கையெழுத்து போட்டோம் துளசி என்கிற சதீஷ் என்னுடைய உறவினர் என்றால் பக்கத்துவீட்டுக்காரர்.

வா.சா.ஆ.–1 சங்ககிரி வழக்கறிஞர் அலுவலகத்தில் வைத்து சாட்சி கையெழுத்து செய்தேன். இரண்டாவது முறை பிரதிவாதியின் வீட்டில் வைத்து பணம் கொடுத்தோம். வாதி பிரதிவாதிகள் கையெழுத்து போட்ட பிறகு நான் கையெழுத்து போட்டேன். விலை பேசிய விவரம் எனக்கு தெரியும். பணம் கொடுத்த விவரம் எனக்கு தெரியும். முதலில் ரூ.4,00,000/– கொடுத்தோம். இரண்டாவது தடவை பணம் கொடுத்த நாள் தெரியாது. இரண்டாவது தடவை ஒரு லட்சம் மட்டும் வாதிக்கு கொடுத்தார் என்றால் சரியல்ல. இரண்டாவது தடவை ரூ.5,00,000/– கொடுத்தோம்.

பணம் பறிமாற்றம் வங்கி மூலம் செய்யவேண்டும் என்பது தெரியும் என்றால் ஆமாம். வாதி மொத்தமாகவே பிரதிவாதிகளுக்கு ரூ.5,00,000/–தான் கொடுத்தார் என்றும், நான் வாதியின் பக்கத்துவீட்டுக்காரர் என்பதால் வாதிக்கு சாதகமாக உண்மைக்கு புறம்பாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd./-A.M.Ravi
I Additional District Judge,
Salem.